பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
01 07 2024 **MONDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை, நுகர்வோருக்கு மாதத்திற்கு 4 சதவீதம் அளவிற்கு சேமிப்பை வழங்கியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- டிஜிட்டல் இந்தியா இயக்கம், மக்களின் வாழ்க்கையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள ராணுவம் தயாராக உள்ளதாக அதன் தலைமைத் தளபதி ஜெனரல் Upendra Dwivedi கூறியுள்ளார்.
- Leon மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் பட்டம் வென்றார்.

>>>>><<<<<

மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மருத்துவர் தினத்தை ஒட்டி விடுத்துள்ள செய்தியில் இதனை தெரிவித்துள்ள அவர், சுயநலமின்றி அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் மருத்துவர்களை கௌரவிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சவாலான சூழ்நிலையில் மருத்துவர்கள் திறம்பட ஆற்றிய பணி, பாராட்டுதலுக்குரியது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

இதேபோல், பட்டய கணக்காளர் தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில், பொருளாதாரத்தை சீரமைப்பதில் பட்டய கணக்காளர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் சீரான வளர்ச்சியை காண்பதற்கு இவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>><<<<<

குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நடைபெற்று வருகிறது.

மக்களவையில் இந்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, நீட், அக்னிவீர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி பேசினார்.

நீட் தேர்வு ஏழை மக்களுக்கு உதவும் வகையில் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

நீட் முறைகேடுகள் தொடர்பான பிரச்சினை குறித்து, நாள் முழுவதும் விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

ஹிந்துக்கள் தொடர்பாக திரு. ராகுல் காந்தி தெரிவித்த கருத்துக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டோர் கடும் ஆட்சேபங்களை தெரிவித்தனர்.

ஹிந்து சமுதாயத்தினர் குறித்து தெரிவித்த கருத்துக்கு திரு. ராகுல் காந்தி மன்னிப்பு கோர வேண்டும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தினார்.

அப்போது குறுக்கிட்டு பேசிய மக்களவைத்தலைவர் திரு. ஓம் பிர்லா, உறுப்பினர்கள் பேசும் போது அவையின் கண்ணியத்தையும், மாண்பையும் குலைக்கும் வகையில் கருத்துக்களை தெரிவிக்கக்கூடாது என்று கூறினார்.

அக்னிவீர் திட்டம் தொடர்பாக திரு. ராகுல் காந்தி தெரிவித்த கருத்தினை, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் நிராகரித்தார்.

இந்த பிரச்சினையில் தவறான தகவல்களை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதேபோல், குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்துக்கு, வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் மறுப்பு தெரிவித்தார்.

முன்னதாக இந்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பிஜேபி உறுப்பினர் Bansuri Swaraj, விவசாயிகள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்கான திட்டங்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளதாக கூறினார்.

கோவிட் பாதிப்பு காலம் முதல்தற்போது வரை 81 கோடிக்கும் மேற்பட்ட ஏழை மக்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் Bansuri Swaraj தெரிவித்தார்.

முன்னதாக, உலக டிவென்டி டிவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு இரு அவைகளிலும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

>>>>><<<<<

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை, நுகர்வோருக்கு மாதத்திற்கு 4 சதவீதம் அளவிற்கு சேமிப்பை வழங்கியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த வரி விதிப்பு முறை செயல்படுத்தப்பட்டு, ஏழு ஆண்டுகள் நிறைவடைந்ததை அடுத்து, மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி விதிப்பு முறை தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் போது, இது தெரியவந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோப்பு, சலவைத்தூள், கோதுமை, அரிசி, தயிர், மோர், கைக்கடிகாரங்கள், 32 இன்ஞ் வரையிலான தொலைக்காட்சி பெட்டிகள், மொபைல் போன், குளிர்சாதன பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரம் போன்றவற்றிற்கான வரிகள் இந்த வரி விதிப்பு முறை மூலம் குறைக்கப்பட்டுள்ளது அல்லது முழுமையாக வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான புள்ளி விவரங்களும் அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

வரி கட்டமைப்பில் மிகப் பெரிய சீர்திருத்த நடவடிக்கையாக சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை, கடந்த 2017ஆம் ஆண்டு இதேநாளில் அறிமுகப்படுத்தப்பட்டது.

>>>>><<<<<

டிஜிட்டல் இந்தியா இயக்கம், மக்களின் வாழ்க்கையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இந்த இயக்கத்தின் ஒன்பதாவது ஆண்டு தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மின்னணு நிர்வாகம் முதல், மின்னணு பணப்பரிமாற்றம் வரை அனைத்து நிலைகளிலும் மக்களின் வாழ்க்கை முறையை இந்த இயக்கம் எளிமையாக்கியுள்ளதாக திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

குடும்ப ஓய்வூதிய திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் பெண்களுக்கு பயனளிக்கும் வகையில் உள்ளது என்று மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

குடும்ப ஓய்வூதியதாரர்களின் குறைகளை தீர்ப்பதற்கான சிறப்பு இயக்கத்தை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த இயக்கம், இம்மாத இறுதிவரை நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

46 அமைச்சகங்கள் மற்றும் துறைகள் இதில் பங்கேற்றுள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>><<<<<

அனைத்து தரப்பினரின் மேம்பாட்டிற்காக குடிமைப்பணி அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் தம்மை சந்தித்த குடிமைப்பணி அதிகாரிகளிடையே கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மக்களின் நம்பிக்கையை பெறும் வகையில் பணியாற்றுவதே சிறந்த நிர்வாகத்திற்கான எடுத்துக்காட்டு என்றும் அவர் தெரிவித்தார்.

சமூக வலைதளங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் அதிகாரிகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள ராணுவம் தயாராக உள்ளதாக அதன் தலைமைத் தளபதி ஜெனரல் Upendra Dwivedi தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், நம் நாட்டு ராணுவத்தை தலைமையேற்று வழிநடத்துவது பெருமிதம் அளிக்கக்கூடியது என்றார்.

ராணுவத்தில் நவீனமயமாக்கும் பணிகளுக்கு உத்வேகம் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு ஊக்கம் அளிக்கப்படும் என்றும் ஜெனரல் Upendra Dwivedi தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

துருக்கியில் நேரிட்ட இயற்கை எரிவாயு குழாய் வெடிவிபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர், 60 பேர் காயமடைந்தனர்.

Torbali மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் நேரிட்ட இந்த விபத்தில் 11 கட்டிடங்கள் சேதமடைந்ததாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எரிவாயு விநியோகம் துண்டிக்கப்பட்டதாகவும், அப்பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

புதிய குற்றவியல் சட்டங்களில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளதாக ஜம்மு காஷ்மீர் காவல்துறை தலைவர் திரு. R.R. Swain கூறியுள்ளார்.

இன்று ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு இந்த சட்டங்கள் உதவிடும் என்றார்.

இந்த சட்டங்கள் குறித்து, காவல்துறையினருக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. R.R. Swain தெரிவித்தார்.

>>>>><<<<<

'புதிய குற்றவியல் சட்டங்கள்' குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பாகிறது.

மாநில செய்திப் பிரிவு வழங்கும் இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் Adeeb Mohammed, Shamilee Rajkumar, ஊடகவியலாளர் சியாமளா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இன்று இரவு 8.30-மணிக்கு பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகவுள்ள இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

Leon மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் பட்டம் வென்றார்.

ஸ்பெயினில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் அவர், 3-1 என்ற புள்ளிக்கணக்கில் Jaime Santos-ஐ வென்று இப்பட்டத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நான்காம் நாளான இன்று ஃபாலோஆனை பெற்று இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய தென்னாப்பிரிக்கா 373 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனைத் தொடர்ந்து, இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா விக்கெட் இழப்பின்றி 37 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 603 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

தென்னாப்பிரிக்கா முதல் இன்னிங்ஸில் 266 ரன்னுக்கு ஆட்டமிழந்து, ஃபாலோஆனை பெற்றது.

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 4 தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்ற இப்போட்டியின் 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

125 கிலோ எடைப்பிரிவில் Anuruth Kumar-ம், 92 கிலோ எடைப்பிரிவில் Jointy Kumar-ம், 97 கிலோ எடைப்பிரிவில் Sahil Jaglan-னும், 70 கிலோ எடைப்பிரிவில் Abhimanyou-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

74 கிலோ எடைப்பிரிவில் Jaideep-ம், 65 கிலோ எடைப்பிரிவில் Rohit-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

79 கிலோ எடைப்பிரிவில் Amit-ம், 57 கிலோ எடைப்பிரிவில் Shubham-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>>><<<<<

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற ஆட்டக்கணக்கில் ஹாங்காங்-கை வென்றது.

>>>>><<<<<

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று செர்பியாவின் Miomir Kecmanovic–ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>END<<<<<